

# சாகரம்

வெளியீடு:

மூதூர் பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் கௌரவிப்பு
2021

# சாகரம்

வெளியீடு:
மூதூர் பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

# சாகரம்


பெயர் : எழுத்தாளர் கௌரவிப்பு 2021

வெளியீடு : பிரதேச சபை

முதற் பதிப்பு : டிசம்பர் 2021

பிரதிகள் : 150

பக்கங்கள் : vi + 37

வடிவமைப்பு : எம். முகம்மட் இர்பான்

(Public Library)

அச்சுப் பதிப்பு :

**S&S Printers, Iqbal Road, Mutur**

**T.P : 0771544100**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிக்கூற்று

"தன்னிறைவுடன் கூடிய சுபீட்சமான பிரதேசம்"

# நோக்குக்கூற்று

சபையின் பௌதீக, மனித வளங்களை வினைத்திறனாகவும், செயற்திறனாகவும் செயற்படுத்தி மக்களின் சமூக அபிவிருத்தி, சுகாதாரம், பொருளாதாரம், பொது வழிகள் காணி கட்டடங்கள் மற்றும் பொதுப்பயன்பாட்டு நலன்புரி சேவைகளை வழங்கி அவற்றை திறம்பட முகாமை செய்வதோடு மக்களின் நலனையும், வாழ்வாதாரத்தையும் மக்களின் பங்களிப்புடன் மேம்படுத்தி அவற்றை கண்காணிப்பதனூடாக இலக்கை அடைதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உள்ளூராட்சி ஆணையாளர்
## திரு. என்.மணிவண்ணன்
## அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

கிழக்கிலங்கையில் எழில் மிக்க திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசத்தில் வாழும் எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் நோக்கில் வெளியிடப்படும் சாகரம் மலர் வெளியிடுவது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த இரு வருடங்களாக காணப்படும் அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது நாட்டில் இலக்கியம், அரசியல், பொருளாதார ரீதியில் பின்னடைவுகள் காணப்படுகின்ற நிலையில் இவ்வாறானதொரு மலர் வெளியிடப்படுவது எழுத்தாளர்கள் மத்தியில் ஒரு உத்வேகத்தை உண்டாக்குகிறது.

நூல்களின் முக்கியமானதொரு குறிக்கோள் நம்மை ஊக்குவிப்பதாகும். அதனடிப்படையில் இம் மலர் நம்மை ஊக்குவிப்பது மட்டுமின்றி இனிவரும் சமூகத்தையும் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதனை ஊக்குவிப்பதாக அமைகின்றது. மூதூர் பிரதேசத்தின் எல்லைக்குள் வாழும் எழுத்தாளர்களை இனங்கண்டு , அவர்களைக் கௌரவப்படுத்தும் வகையில் வெளியிடப்படும் சாகரம் உள்ளூர் ஆளுமைகளை ஆவணமாக்கும் ஒரு முயற்சியாகவும் அமைகின்றது.

இச்சிறிய மலர் முயற்சியானது எதிர்காலத்தில் எழுத்தாளர்களைப்பற்றி கற்க விரும்புவோருக்கும், அது தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபடுவோருக்கும் கற்றல், கற்பித்தல் பணிகளுக்கும் பெரும் உதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் இவ் இலக்கிய முயற்சியானது வெற்றியடைவதற்கு எனது அன்பு கலந்த ஆசிகளை வழங்குகின்றேன்.

"நன்றி"

உள்ளூராட்சி ஆணையாளர்,
உள்ளூராட்சி திணைக்களம்,
கிழக்குமாகாணம்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்
# திரு. எஸ்.நவநீதன்
## அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

சமூகத்தின் கண்களாய் நின்று காலத்தை கடந்தும் எமது சமூகத்தின் இருப்பை இவ்வுலகுக்கு எடுத்தியம்பும் வரலாற்று புருஷர்கள் எழுத்தாளர்கள் என்றால் அது மிகையாகாது. ஆனால் வாழும்போதே அவர்களை இனங்கண்டு அவர்களுக்கான அங்கீகாரத்தையும், கௌரவத்தினையும் வழங்கவேண்டியது எமது கடமையாகும்.

இலத்திரனியல் உலகில் இன்று எழுத்துத்துறையில் நூல் வெளியீடுகளின் வகிபம் குறைந்து கொண்டு சென்றாலும், காலச்சூழலுக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொண்டு எழுத்தாளப் பெருந்தகைகள் அதனூடாக தமது எழுத்துப்பணியை மேற்கொண்டு வருவதை நாம் இன்று அவதானிக்கலாம்.

நிறைந்த எழுத்தாளர்களைக் கொண்ட மூதூர் பிரதேசத்தின் வரலாற்றையும் அதன் பெருமைகளையும், மரபுகளையும், வாழ்க்கை அம்சங்களையும் கூறும் எழுத்தாளர்களை கௌரவப்படுத்தும் இவ்வாறான நிகழ்வு ஒரு பொருத்தமான பணியாகும். மூதூர் பிரதேச சபையின் கௌரவ தவிசாளரின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்படும் இவ்விழாவில் எழுத்தாளர்களின் வெளியீடுகள், படைப்புக்கள் அவர்களின் கௌரவத்தினை ஆவணப்படுத்தும் வகையில் **'சாகரம்'** என்னும் நினைவு மலரின் வெளியீடு போற்றுவதற்குரியது.

மூத்த எழுத்தாளர்களின் அனுபவத்துடன் இளம் எழுத்தாளர்களின் தேடலையும் ஒன்றினைத்து எதிர்காலத்தில் நிறைந்த எழுத்தாளர்களை மூதூரில் பிரசவிக்க வைக்கக்கூடிய ஒரு கௌரவிப்பு விழாவாக நான் இதை கருதுகிறேன். எனவே இவ்விழா சிறப்புற அனைத்து வகையிலும் உதவிபுரிந்த அனைத்து உயரிய உள்ளங்களுக்கும் மற்றும் இவ்விழாவில் கௌரவம் பெறவுள்ள அனைத்து எழுத்தாளப் பெருந்தகைகளுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும் , ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்

" நன்றி "

மாகாணப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்குமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
## திரு. தென்னக்கோன்
## அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

எனது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் மூதூர் பிரதேச சபையினால் மூதூர் பிரதேசத்தில் வாழும் எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வினை ஏற்பாடு செய்தமையினையும் சாகரம் மலர் வெளியிடப்படுவதனையும் இட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இதேவேளை எத்தனையோ தொழிநுட்ப வளர்ச்சிக்கும் மத்தியிலும் அருகிச்செல்லும் எழுத்து இலக்கிய கலைக்கு உயிர்கொடுத்து இதனை வாழவைத்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர்களின் இச்சேவை பிரதேசத்திற்கும், நாட்டிற்கும் தேவை என்பதோடு எழுத்து இலக்கியத்தை வாழவைக்கும் வாசகர்களுக்கும் நன்றியை தெரிவித்து, எழுத்தாளர்களின் ஆற்றலை மெம்மேலும் வளர்ச்சியடைய பாராட்டி வாழ்த்துகிறேன்.

" நன்றி "

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூதூர் பிரதேச சபையின்
# கௌரவ தவிசாளர்
# ஜனாப்.எம்.எம்.ஏ.அரூஸ்
## அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

மூதூர் பிரதேசத்திலுள்ள எழுத்தாளர்கள் வாழும்போதே அவர்களை பாராட்டி கௌரவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் எமது பிரதேச சபையினால் இந் நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளோம்.

பிரதேச அபிவிருத்தியினை மட்டும் இலக்காகக் கொள்ளாமல் கலை இலக்கியத்தினையும் வளர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு படைப்பாளியினதும் இலக்கியப் பிரவேசம், எழுத்தாக்கம் ,வெளியீடுகள், பெற்றுக்கொண்ட பாராட்டுக்கள், விருதுகள், பட்டங்களோடு அவர்கள் பற்றிய விபரங்களும் இச்சாகர மலரில் சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

எமக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த எழுத்தாளர்களுடைய விபரங்களை பரிசீலித்தபோது தேசியமட்டத்தில் சாதனை புரிந்த பல எழுத்தாளர்கள் நம்மத்தியில் இருப்பதைக்கண்டு பெரிதும் மகிழ்வடைகின்றேன். இவ்விழாவில் **'பெற்கிழி'** **'முத்தூர்'** விருது பெறும் சகலரையும் வாழ்த்துவதில் பெருமிதமடைகின்றேன்.

நமது மண்ணைச் சேர்ந்த எழுத்தாளர்களை **'மூத்த எழுத்தாளர்கள்'**, **'இளம் எழுத்தாளர்கள்'** என இரண்டாக வகுத்து அவர்களைப் பாராட்டி கௌரவித்துள்ளோம். எதிர் காலத்தில் இவ்வாறான ஏனைய துறைசார்ந்த கலைஞர்களையும் இனம் கண்டு அவர்களுக்கும் கௌரவத்தினை வழங்கவுள்ளேன்.

**'சாகரம்'** மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய உள்ளூராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மூதூர் பிரதேச செயலாளர், கௌரவ பிரதித் தவிசாளர், மூதூர் பிரதேச சபையின் செயலாளர் ஆகியோருக்கும், இவ்விழவினை சிறப்பாக நடத்துவதற்கு உதவிய பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர்களுக்கும், இவ்மலரை வடிவமைத்துத்தந்த மூதூர் பிரதேச சபையின் பொது நூலகத்தில் கடமையாற்றும் எம்.முகம்மட் இர்பானுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, உலகந்தழுவிய கொவிட்19 கொரோனா அச்சுறுத்தல் நிலவும் இக்காலப்பகுதியில் இவ்விழா சிறப்பாக நடைபெறுவதற்கு தங்களது அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பை வழங்கிய சகலருக்கும் எமது பாராட்டுதல்களையும் நன்றியறிதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நன்றி"

தவிசாளர்,<br>
பிரதேச சபை,<br>
மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூதூர் பிரதேச செயலாளர்
# ஜனாப். எம்.பீ.எம்.முபாறக்
## அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

மூதூர் பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எழுத்தாளர்களை கௌரவிக்கின்ற நிகழ்வுக்கு வெளியிடப்பட்டுள்ள 'சாகரம்' மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்தகால வரலாற்றினை எதிர்கால சமூகத்திற்கு கொண்டு செல்லும் ஊடகமாக எழுத்தும், எழுத்தாளர்களும் உள்ளனர். அந்தவகையில், ஒரு சமூகத்தின் எழுத்தாளர்கள் போற்றபட்டவேண்டியவர்கள்.

இவ்வாறான ஒரு நிகழ்வினை ஏற்பாடு செய்த பிரதேச சபைக்கும், அதன் தவிசாளர் உட்பட பணிக்குழுவினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

"நன்றி"

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூதூர் பிரதேச சபையின்
## கௌரவ பிரதி தவிசாளர்
## திரு. சி. துரைநாயகம்
## அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

காலத்தின் கண்ணாடியாய்த் திகழ்கின்ற இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களைக் கௌரவப்படுத்தி ஊக்கப்படுத்துவதோடு மட்டுமல்லாது இளம் எழுத்தாளர்களையும் உருவாக்கவேண்டிய பெரும் பொறுப்பு எமது சமுதாயத்திற்கு இருக்கின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் சமுதாயத்தில் இளம் கலைஞர்களை உருவாக்க தூண்டுகோளாக அமையும். அந்தவகையில் மூதூர் பிரதேசத்தில் எழுத்துத் துறையில் தமக்கான ஒரு தனி இடத்தினை உருவாக்கி சமுதாயத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற எழுத்தாளர்களை கௌரவிக்கும் முகமாக கௌரவ தவிசாளர் ஜனாப் எம்.எம்.ஏ.அரூஸ் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எழுத்துக்களின் வலிமையால் எழுந்து நிற்கின்ற எமது மண்ணில் எழுத்தாளர்களைக்கொண்டு அவர்களை கௌரவிக்கும் முகமாக உருவாக்கப்பட்டுள்ள "சாகரம்" என்ற மலரும் அதன் வெளியீட்டு நிகழ்வும் மிகச் சிறப்பாக அமைவதற்கு எல்லாம்வல்ல இறைவனுடைய ஆசிகள் கிடைக்கப் பெற வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்

"நன்றி"

உப-தவிசாளர்,
பிரதேச சபை,
மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூதூர் பிரதேச சபையின்
## செயலாளர்
# வீ.சத்தியசோதி
## அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

கலைஞர்களாகிய நீங்கள் அனைவரும் இந் நாட்டின் கண்கள் ஆவீர்கள். தங்களின் கலை வடிவங்களுடாகவேதான் நம் நாட்டின் கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், வரலாறு என்பவற்றைக் காண்கின்றோம்.

கலைஞர்களாகிய அனைவரும் மிகவும் சிரமங்கள், நிதி நிலைமைகள் போன்ற பல கஸ்டங்களுக்கு மத்தியிலும், நம் நாட்டின் மற்றும் பிரதேசங்களின் வரலாறுகளை ஆதாரங்களுடன் தேடி அதனை மக்களுக்கு வெளிப்படுத்தி வருகின்றீர்கள். நீங்கள் இல்லையெனில் நமது சந்ததியினருக்கு இவை தெரியாமலே போய்விடும். கலைஞர்களாகிய தாங்கள் மூலம் நாடகம், நாட்டியம், பாடல், கூத்து, கவிதை, சிறுகதை,நாவல், வரலாறு என பல வடிவங்கள் உருவாக்கப்படுகின்றன.

எனவே மூதூர் பிரதேசத்தில் வழி வழியாக பாரம்பரிய கலைகள் மழுங்கவிடாமல் எதிர்காலத்தில் அவை பாதுகாக்கப்படவேண்டும். இப்பிரதேசத்தின் கலைஞர்களாகிய தாங்கள் அனைவரும் மென்மேலும் வளர எனது வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

"நன்றி"

செயலாளர்,
பிரதேச சபை,
மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த எழுத்தாளர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த எழுத்தாளர்கள் விபரம்

1. அந்தோனி இராசேந்திரம்
2. அபூபக்கர் செய்யது இப்றாஹீம்
3. அருணாசலம் அரசரெத்தினம்
4. மீராசா அப்துல் பரீத்
5. முகம்மது சுல்தான் அமானுல்லா
6. தம்பிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
7. நல்லையா சித்திரவேல்
8. அன்ரனி சத்தியசீவன் பாய்வா
9. கதிரவேலுப்பிள்ளை ஜெயநாதன்
10. அபுசாலிகு மீரா முகைதீன்
11. கச்சு முகம்மது முகம்மது இக்பால்
12. கனகசபை தேவகடாட்சம்
13. அருளம்பலம் குகராசா
14. அப்துல் சமது உபைத்துல்லா
15. ஆறுமுகம் செல்வநாயகம்
16. இராமலிங்கம் இரத்தினசிங்கம்
17. செல்லத்துரை லோகராசா
18. விநாயகமூர்த்தி நவரெத்தினராஜா
19. சுஹைறதா அப்துல் கரீம்
20. அப்துல் வாஹிது முஹ்சீன்
21. முகம்மது காசிம் முகம்மது ஷெரீப்
22. கனகசூரியம் யோகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அந்தோனி இராசேந்திரம்

**(1934.11.06)**

மூதூரைச் சேர்ந்த அ.இராசேந்திரம் தி/புனித அந்தோனியார் மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் அதிபராகப் பணியாற்றி ஒய்வு நிலையில் உள்ளார்.

இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட இவர் **'மூதூரில் எனது பணியும் பாடுகளும்'** (2015), **'மூதூரில் கிறிஸ்தவம்'** (2018) ஆகிய இரு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.இலக்கியத்துறையிலும் ஓவியத்துறையிலும் ஈடுபாடு கொண்டு இவர் பல்வேறு பாராட்டுக்களையும், பரிசில்களையும் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அபூபக்கர் செய்யது இப்றாஹீம்
**(1943.07.09)**
**(கலைமேகம்)**

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அ.செ.இப்றாஹீம் தி/மூதூர் மத்திய கல்லூரியில் கல்வி பயின்று 1962 இல் எழுத்துலகில் பிரவேசித்தவர்.


இவர் கவிதை, சிறுகதை, கட்டுரை ஆகிய துறைகளில் தடம் பதித்தவர். **'தங்கப்பாளம்'** (2003) கவிதை நூல், 'மகரந்தம்' (2004) கவிதை நூல், 'மூதூர் வன்செயல் காவியம்' (2006) ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

தினபதி, நவமணி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளில் ஆக்கங்கள் வெளிவந்தன. அத்தோடு வானொலியிலும் இவரது கவிதைகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் நடைபெற்ற கவிதைப் போட்டிகளில் பரிசு பெற்றுள்ளதோடு, **'கலாபூஷணம்'** (2007), **'ஆளுனர் விருது'** (2007) உட்பட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருணாசலம் அரசரெத்தினம்

**(1944.06.16)**

சேனையூர்-06 ஐப் பிறப்பிடமாகக் கொண்ட அ.அரசரெத்தினம் தி/சேனையூர் மத்திய கல்லூரியில் கல்வி பயின்றவர். இலங்கை போக்குவரத்துச்சபை பஸ் நடத்துநராகவும், சாலை வீதிப் பரிசோதகராகவும், கிராம சேவையாளராகவும் பதவி வகித்து ஓய்வு பெற்றுள்ளார்.


1963 இல் இலக்கியத்துறையில் பிரவேசித்து கவிதை, ஆன்மீகம், அழகியல், விமர்சனம் போன்றவற்றை தினபதி, சிந்தமணி, தினகரன், வீரகேசரி, தினக்குரல் உட்பட பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார்.

**'எதிர் நீச்சலடிப்போம் ஏமாறாதிருப்போம்'** (2011), **'ஏக்கம்'** (2014) ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவரது இலக்கியப் பணிக்காக **'முதலமைச்சர் விருது' (2011), 'கலாபூஷண விருது' (2014) 'கலைத்துவஆளுமைவிருது' (2019) 'கலைமாமணி விருது' (2015)** ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மீராசா அப்துல் பரீத்
(1945.01.30)

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட மீ.அ.பரீத் தி/அல் ஹிதாயா மகா வித்தியாலயம், தி/மூதூர் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்றவர். ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக (SLEAS) கடமை புரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.


இவர் ஆக்க இலக்கியத்துறையில் ஆர்வங்கொண்டு **'கினாந்தி முனைக் காவியம்'** (2010) **'சிந்தனைப் பூக்கள்'** (2015), **'நிகழ்வும் நெறியும்'** (2015) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவரது இலக்கிய பணிக்காக **'வித்தகர் விருது'** (2013) **'கலாபூஷண விருது'** (2014) ஆகிய விருதுகளையும். கவிதைக்காக கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சிறப்புச் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

இவர் மூதூர் உமறுநெயினார் புலவரின் சகோதரனின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முகம்மது சுல்தான் அமானுல்லா

**(1946.07.01)**

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட மு.சு.அமானுல்லா மூதூர் மத்திய கல்லூரியில் பயின்று பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்.


மூதூரின் முதலாவது பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரும் ஓய்வு நிலை அதிபருமான இவர் சிறுகதைத் துறையில் ஆர்வம் கொண்டு பல சிறுகதைகளை எழுதியுள்ளார். இவற்றில் சில பிரதேச, மாவட்ட, தேசிய, சர்வதேச மட்ட பரிசுகளைப் பெற்றுள்ளன. **'வரால் மீன்கள்'** (2007), **'ஒரு பெண்ணின் கதை'** (2018) ஆகிய இரு சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

இவரது இலக்கிய பணிக்காக **'கலாபூஷண விருது'** (2009), **'முதலமைச்சர் விருது'** (2010), **இலங்கை இலக்கியப் பேரவை விருது'** (2008), **'விபவி இலக்கிய விருது'** (1999) ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

இவரது வரால் மீன்கள் சிறுகதைத் தொகுப்பிற்கு **சாஹித்திய மண்டலப் பரிசு** 2007ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.மூதூர் மத்திய கல்லூரியின் பொன்விழா மலரான 'அன்னை'(1972), பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 'யாழ்பிறை'(1972), எம்.எம்.கே.அதிபர் நினைவு மலர்(இதயமலர்) ஆகியவற்றை இவர் தொகுத்து வழங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தம்பிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
(1948.02.25)

பள்ளிக்குடியிருப்பை பிறப்பிடமாகக் கொண்ட த.சிதம்பரப்பிள்ளை தி/பள்ளிக்குடியிருப்பு இந்துக்கல்லூரி மட்/வந்தாறுமூலை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்றவர்

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர். ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.நாட்டுக் கூத்து அண்ணாவியரான இவர் **'சபதங்கள்'**, **'கொம்பு முறிக் கொம்பு'** (2015) **'பத்தினியம்மன் குளிர்த்திக் காவியம்'**, **'விரியும் விம்பங்கள்'**, உட்பட பல நூல்களை எழுதியுள்ளார்.

இவரது இலக்கியப்பணிக்காக 2017 இல் **'கலாபூஷண'** அரச விருதும், 2018 இல் கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் **'வித்தகர் விருதும்'**, பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லையா சித்திரவேல்

**(1948.08.14)**

**(பாரதிபுரம் ந.சித்திரவேல்)**


சம்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ந.சித்திரவேல் தி/பாரதிபுரம் அ.த.க. பாடசாலை, தி/தோப்பூர் முஸ்லிம் மகாவித்தியாலயம், மூதூர் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்றுள்ளார்.

நீண்டகாலமாக எழுதுனராக கடமையாற்றி முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அதிசிறப்பு வகுப்பிற்கு (SUPRA) பதவி உயர்வு பெற்று கடமைபுரிந்த இவர் தற்போது ஓய்வு நிலையில் உள்ளார்.

இவரது சிறுகதைகள் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளிலும், மாணிக்கம், குங்குமம், போன்ற சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.**'நெஞ்சில் ஒரு நிறைவு'** (2000) என்னும் சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்ரனி சத்தியசீலன் பாய்வா
## (1948.10.27)
## (மூதூர் ஜெயராஜ்)


மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அ.ச.பாய்வா தி/மூதூர் அந்தோனியார் மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். கிராம உத்தியோகத்தராகக் கடமை புரிந்து ஓய்வு நிலையில் உள்ளார். மேலும் இவர் எழுத்தாளர், இசையமைப்பாளர், சிறந்த விளையாட்டு வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது **'ஆத்மவிசாரம்'** என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலுக்கு 2008 ஆம் ஆண்டு **சாகித்திய மண்டலப் பரிசு** பெற்றுள்ளார். **'ஈழத்தை அளந்த புனிதன்'** என்னும் குறுங்காவியத்தினை 2010 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

2008 இல் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் இவருக்கு **'தமிழியல் விருது'** வழங்கப்பட்டுள்ளது. 2014 இல் மண்முனை வடக்கு பிரதேச செயலக கலசார பேரவையினால் **'தேனக கலைச்சுடர் விருது'** வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.இவர் பல்வேறு மட்டங்களில் நடைபெற்ற கவிதை, சிறுகதை, குறுங்காவியப் போட்டிகளில் பரிசு பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கதிரவேலுப்பிள்ளை ஜெயநாதன்
(1950.12.10)
(காசியப்பித்தன்)


சம்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட க.ஜெயநாதன் தி/சம்பூர் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும், அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

கவிதை, நாடகம், நாட்டுக் கூத்து ஆகிய கலைகளில் ஈடுபாடு கொண்ட இவர் **'அற்றைத்திங்கள் கவிதைகளும் பாடல்களும்'** என்னும் கவிதை நூலை 2016 இல் வெளியிட்டுள்ளார்.

இவரது இலக்கியப் பணிக்காக 2017 இல் **'கலாபூஷண விருது'**, 2020யில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் **'வித்தகர் விருது'** என்பவற்றுடன் கொழும்பு தமிழ்ச் சங்கம், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் ஆகியவற்றினால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டிகளிலும் பரிசுகளைப் பெற்றுக்கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அபுசாலிகு மீரா முகைதீன்
## (1951.01.10)
### (மூதூர் முகைதீன்)

மூதூரைப் பிறப்பிடமாக கொண்ட அ.மீ.முகைதீன் தி/மூதூர் மத்திய கல்லூரி, திருகோணமலை இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றுள்ளார். இலக்கிய உலகில் **மூதூர் முகைதீன்** என அறியப்பட்ட இவர் ஓய்வு பெற்ற அதிபராவார். கடந்த ஐம்பது வருடகாலமாக இலக்கியத்துறையில் ஈடுபட்டு வருகிறார்.

**'முத்து'** (1976), **'பிட்டும் தேங்காய்ப்பூவும்'** (1998), **'இழந்து விட்ட இன்பங்கள்'** (2003) **'ஆசிரியப் பணியை அழகுறச் செய்வோம்'** (2005) **'அபோதம்'** (2016) **'ஒரு காலம் இருந்தது'** (2011), **'ஒருவானில் இரு நிலவுகள்'** (2018) **'கனாக் கண்டேன்'** (2019) ஆகிய நூல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

தேசிய ரீதியாக நடத்தப்பட்ட கவிதை, சிறுகதை போட்டிகளில் பரிசுகளையும் விருதுகளையும் பெற்றுள்ளார். அவுஸ்திரேலிய வானமுதம் சஞ்சிகையினால் 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சர்வதேச கவிதைப் போட்டியில் இவர் முதலாமிடம் பெற்றுள்ளார்.

**'ஓசை'** என்ற காலாண்டு கவிதைச் சஞ்சிகையின் ஆசிரியரான இவர் இலக்கியப் பணிக்காக **'கலாபூஷணம் விருது'** (2008) **'முதலமைச்சர் விருது'** (2011) ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கச்சு முகம்மது முகம்மது இக்பால்
## (1951.02.10)

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி கே.எம.எம்.இக்பால் நீண்டகாலமாக ஆசிரியர் பணிபுரிந்து, பின்பு ஆசிரியர் ஆலோசகராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவர் மூதூர் தி/அல் ஹிதாயா மகாவித்தியாலயம், தி/மூதூர் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் பயின்று போராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணிப்பட்டம் பெற்றுள்ளார்.

இதுவரை 15 இலக்கிய நூல்களையும், 55 கல்வி சார்ந்த நூல்களையும் வெளியிட்டுள்ளார். **'மூதூர் உமறு நெய்னாப் புலவரின் கவிநயம்'** (2007), **'தியாகி'** சிறுகதைத் தொகுப்பு (2007), **'விடிவெள்ளி'** சிறுவர் நாவல் (2005), **'கடலின் நடுவில்'** நாவல் (2008), ஆகிய இவரது நூல்கள் முக்கியமானவை.

இவரது இலக்கியப் பணிக்காக **'கலாபூஷணம் விருது', வித்தகர் விருது', 'வாழ்நாள் சாதனையாளர் விருது'** முதலிய விருதுகளை இவர் பெற்றுள்ளார். இதுவரை மூன்று உலக இலக்கிய மகாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கனகசபை தேவகடாட்சம்
### (1953.10.12)
### (கனககடாட்சம்)


மல்லிகைத்தீவைப் பிறப்பிடமாக கொண்ட க. தேவகடாட்சம் மல்லிகைத்தீவு மகாவித்தியாலயம், தி/புனித சூசையப்பர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றவர்.

இவர் **'காலக்கீறல்கள்'** (1998), **'குமுறல்கள்'** (2001), **'குருதிமண்'** (2002), **'ஒரு பிடிமண்'** (2015), ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களையும் **'மணப்பரிசு'** (2015) என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார்.

சென்னை பாரத ஸ்டேட் வங்கி நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது **'குருதிமண்'** நூல் மூன்றாம் பரிசைப் பெற்றுள்ளது. ஈழத்துச் தமிழ்ச் சங்கம், விக்டோரியா-ஆவுஸ்திரேலியா நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியிலும் இவரது சிறுகதை இரண்டாமிடம் பெற்றுள்ளது. மேலும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவலக திணைக்களத்தின் **'வித்தகர்'** விருதையும் (2018) பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருளம்பலம் குகராசா
(1954.10.24)

சம்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அ. குகராசா தி/சம்பூர் மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். ஆசிரியராகவும் அதிபராகவும் கடமைபுரிந்து பின்னர் இந்து சமய ஆசிரிய ஆலோசகராக பணியாற்றி ஒய்வு பெற்றுள்ளார்.

இவர் **'திருக்கரைசைப் புராண உரை'** (2000) **'கந்தபுராணம் யுத்தகாண்டம்'** (2007) **'சித்திரவேலாயுதர் காதல்'** (2008), **'வெருகல் மாலைப் பத்து'** (2009) உட்பட பல சமயம், இலக்கியம் சார்ந்த நூல்களை எழுதியுள்ளார்.

இவரது இலக்கியப் பணிக்காக **'கலாபூஷணம்'** (2014) **'வித்தகர்விருது'**, **'சம்பூரணம்"**, **'வெருகலம்பதி இசைப்புலவர்'**, **'சைவகாவலர்'** ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அப்துல் சமது உபைத்துல்லா
(1955.11.30)

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ.எஸ். உபைத்துல்லா தனது ஆரம்பக் கல்வியை தி/அல்-ஹிலால் மத்திய கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை தி/புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்திலும் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்து ஆசிரியராகவும், அதிபராகவும் 36 வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலக்கியப் பணியாற்றிவரும் இவர் **'கங்கைக் காவியம்'** (கவிதை-1997), **'நாகம்மாள் நாவல்' ஒரு கண்ணோட்டம்'** (ஆய்வு-1998) **'தமிழ் வளர்த்த பெரியார்கள்'** (கட்டுரை-1999) **'ஜலசமாதி'** (சிறுகதைத் தொகுப்பு-2008) **'நிழலைத்தேடி** (சிறுகதைத் தொகுப்பு-2017) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவரது இலக்கியப் பணிக்காக 'க**னக செந்தி நாதன் கதா விருது'** (2004) **'கலாபூஷண விருது'** (2016) **'வித்தகர் விருது'** (2016) **'துரைவி விருது'** (2016) **'கொடகே சாகித்திய விருது'** (2018) ஆகிய விருதுகளைப் பெற்றுக்கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆறுமுகம் செல்வநாயகம்
### (1955.12.10)


பள்ளிக்குடியிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆ.செல்வநாயகம் தி/பள்ளிக்குடியிருப்பு அ. த.க பாடசாலை, தி/தோப்பூர் அல்-ஹம்ரா மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்றுள்ளார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியரான இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும், யாழ் பல்கழைக்கழகத்தில் முதுகலை கல்விமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தேசிய கல்வி நிறுவகத்தில் PGDE, PGDEM முதலான டிப்ளோமா பட்டங்களையும் பெற்றுள்ளார். ஆசிரியராகவும்,அதிபராகவும் கடமையாற்றிய இவர் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் (SLEAS) பணி புரிந்துள்ளார்.

**'பாடசாலைத் தலைமைத்துவம்'** (2015) **'கற்பித்தல் நுட்பங்கள்'** (2016), **'தி/பள்ளிக்குடியிருப்பு வரலாற்றுப் பார்வை'** (2020) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இராமலிங்கம் இரத்தினசிங்கம்
### (1956.02.27)
### (சேனையூர் இரத்தினம்)


சேனையூர்-05 ஐப் பிறப்பிடமாகக் கொண்ட இரா.இரத்தினசிங்கம் தி/சேனையூர் மத்திய கல்லூரி, மட்/சிவானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்றவர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று கலைமாணிப் பட்டம் பெற்றவர். ஆசிரியராகவும், அதிபராகவும் 27 வருடங்கள் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

தமிழ் மீது கொண்ட பற்றுதலின் காரணமாக கவிதை இலக்கியத்துறையில் 1990 இல் பிரவேசித்தார். இதன் பயனாக **'பொன்னாவரை'** (2014), **'ஓய்வு'**(2016) என்னும் கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வானொலிகளிலும் இவரது கவிதைகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன. நாடகக் கலைஞராகவும், நெறியாளராகவும் இருந்து பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

இவரது இலக்கிய பணிக்காக **'கவிமாமணி'**, **'தேசகீர்த்தி'**, **'தேசமாணி'** ஆகிய பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செல்லத்துரை லோகராசா
## (1956.06.18)

பாலத்தடிச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட செ.லோகராசா முன்னம் போடிவட்டை அ.த.க பாடசாலை மற்றும் தி/கிளிவெட்டி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்றவர். இவர் கலைமாணிப் பட்டம், பட்டப்பின் கல்வி டிப்பேளாமா, இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) தகைமைகளைக் கொண்டவர். ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

**'நிலவே முகம் காட்டு'** (2016), **'தென்பொதிகைச் சந்தனமே'** (2016) **'வளமான வாழ்வுக்கு சுபமான முகூர்த்தங்கள்'** (2017), **'மனையடி சாஸ்திரமும், வாஸ்த்து நிலையும்'** (2018) **'செந்தமிழாய் வந்தவளே'** (2019) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவரது இலக்கியப்பணிக்காக **'தமிழ்மாமணி'**, **'சோதிடக்கலாமாமணி'**, **'அப்துல்கலாம்விருது'**, **'கலைமாறன்'** ஆகிய பட்டங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகமூர்த்தி நவரெத்தினராஜா
(1957.06.27)
(சேனையூர் நவம்)

சேனையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட வி.நவரத்தினராஜா தி/சேனையூர் மகவித்தியாலயத்தில் கல்வி பயின்றவராவார். ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் கவிஞராகவும், கதாசிரியராகவும், நடிகராகவும், ஓவியராகவும், இருந்து இலக்கியப் பணிபுரிந்து வருகிறார். **'பூத்தது தமிழ்'** (2018) என்னும் கவிதை நூலை வெளியிட்டுள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சுஹைதா அப்துல் கரீம்
## (1960.01.28)

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சுகைதா ஏ. கரீம் மூதூரின் மூத்த எழுத்தாளர்களின் ஒருவரான மர்ஹூம் எம்.ஐ.எம்.மஷ்கூர் (மௌலவி) அவர்களின் புதல்வியாவார். தி/மூதூர் புனித அந்தோனியார் மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். பத்திரிகை, சஞ்சிகை, வானொலி என்பவற்றில் கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர்சனம் என்பவற்றை எழுதியுள்ளார்.

**'மர்ஹூம் மஷ்கூர் கதைகள்'** (2013) என்னும் நூலினை வெளியீடு செய்துள்ளார். இவரது இலக்கியப் பணிக்காக **'கலைத்தீபம்'**, **'கலைமதி'**, **'கலைக்குயில்'** ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அப்துல் வாஹிது முஹ்சீன்
### (1960.03.04)
### (மருதூர் பஷீத்)


மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அ.வா.முஹ்சீன் தி/மூதூர் மத்திய கல்லூரி, திருகோணமலை இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்றவராவார். இவர் நீண்ட காலமாக ஆங்கில ஆசிரியராக கடமைபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

**'சோனக தேசம்'**(2006) **'இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம்'** (2008) **'இங்கினெயும் ஒரு மஹ்சர்'**(2010) **'ஜனநாயகம்'** (2011), **'பாடசாலை உளவியல்'**(2016) ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனியினால் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் (2014) இவரது **'விட்டில்'** என்னும் சிறுகதை மூன்றாம் பரிசு பெற்றது. திருகோணமலை பட்டினமும்சூழலும் பிரதேச கலாசார பேரவையினால் 2012 ஆம் ஆண்டு இலக்கியப் பணிக்காக இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முகம்மது காசிம் முகம்மது ஷெரீப்
### (1960.11.06)
### (ஜுவைரியா ஷெரீப்)

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட எம்.சீ.எம். ஷெரீப் தி/மூதூர் அல்-ஹிலால் மத்திய கல்லூரி, தி/மூ/ மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் பயின்று பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தைப் பெற்றவர். ஆரம்பத்தில் ஆசிரியராக கடமைபுரிந்த இவர் பின்னர் இலங்கை நிர்வாக சேவையில் (SLAS) பல உயர் பதவிகளில் அமர்ந்து ஓய்வு பெற்றுள்ளார்.

**'தமிழ் மொழியும் இலக்கியமும்'** (1993), **'சங்கமம்'** (2003), **'சுவடுகள்'** (2011), ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

இவரது **'சுவடுகள்'** நூலுக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இலக்கிய நூல் பரிசும் சான்றிதழும் (2012), எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது (2012) என்பவற்றோடு **'வித்தகர் விருதையும்' (2020)** பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கனகசூரியம் யோகானந்தன்
## (1961.11.12)

சம்பூர் என்னும் அழகிய கிராமத்தில் பிறந்த க.யோகானந்தன் தி/ சம்பூர் மகாவித்தியாலயம், மூதூர் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் பயின்ற பழையமாணவராவார். பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தை பெற்றுள்ளார்.

தி/சீனன்குடா தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிவரும் இவர் கவிதை இலக்கியத்தில் அதிக நாட்டம் கொண்டவர். **'உண்மை என்றும் உயிர் பெறும்'** (2006) கவிதை நூலுக்கு **சாஹித்திய மண்டல பரிசு** பெற்றுள்ளார். சிறுவர் இலக்கியத்தில் ஈடுபட்டு வரும் இவர் **'மழலைக்கோர்பாட்டு'**(2006), **'என்மனவானில்'**(2009), **'நதியில்லா ஓடம்'** (2018) ஆகிய கவிதை நூல்களையும் எழுதியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கவிதைநூல் போட்டியில் **'பிரமிள் விருது'** பெற்றுள்ளார். நிகழ்சித் தொகுப்பாளராகவும், பாடலாசிரியராகவும் விளங்கிவருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ
# ள
# ம்
# எ
# ழு
# த்
# தா
# ள
# ர்
# க
# ள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் எழுத்தாளர்கள் விபரம்

1. முகம்மது முகைதீன் அப்துல் அனஸ்
2. சாஹுல் ஹமிது அமீர்
3. புண்ணியமூர்த்தி ஜெயாகரன்
4. சுந்தரலிங்கம் சிவசங்கரன்
5. முகம்மது முகைதீன் முகம்மது அனீஸ் (அனூன்)
6. சுஜந்தினி யுவராஜா
7. ஜமால்தீன் நஜாத்
8. அரசரெத்தினம் அச்சுதன்
9. எகுத்தார் நளீம்
10. அருமைநாதன் சதீஸ்குமார்
11. முஹம்மது இம்தியாஸ் ஜுனூப்
12. மஸ்கூர் முகம்மது மனாஸீர்
13. பஸ்மிலா சிபான்
14. றசீம் பாத்திமா றொஷானா
15. ஜுனைட் முகம்மது இஹ்ஷான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முகம்மது முகைதீன் அப்துல் அனஸ்
## (1964.09.01)

மூதூர் நெய்தல் நகரைப் பிறப்பிடமாகவும் பெரிய பாலத்தை வசிப்பிடமாகவும் கொண்டுள்ள எம்.எம்.ஏ.அனஸ் துறைமுக அதிகார சபையில் தொழில் உறவு அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார்.

மூதூர் உமறு நெய்னார் புலவரின் பேரனான எம்.எம்.ஏ.அனஸ் கவிதைத்துறையின் மீதான ஆர்வத்தின் காரணமாக **29 நூல்களை** வெளியிட்டுள்ளார். மூதூரில் அதிக இலக்கிய நூல்களை வெளியிட்ட பெருமை இவரையே சாரும். பல்வேறு கவிதைப் போட்டிகளில் பரிசும் பெற்றுள்ளார்.

இவரது **'நாயக காவியம்'** (2015), **'மூதூர் முன்னேற்றக்காவியம்'** (2020) கிழக்குமாகாண தமிழ் இலக்கிய விழாவில் சிறந்த நூல்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. **'தங்கத்துரைக் காவியம்'**,**'மஜீது மாகாவியம்'** **'அமீன் அருங்காவியம்'** ஆகிய காவியங்களையும் எழுதியுள்ளார்.

இவரது இலக்கியப் பணியை கௌரவித்து **'காப்பியக்கதிரோன்'** **'புலவர்'** ஆகிய பட்டங்களும், விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய இலக்கிய மகா நாட்டில் (2016) பேராளராக கலந்து கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாஹூல் ஹமீது அமீர்
## (1970.08.07)
### (மூதூர் முஹாசில்)


மூதூரைப் பிறப்பிடமாக கொண்ட எஸ்.எச்.அமீர் தி/மூ/அல் ஹிலால் மத்திய கல்லூரியில் பயின்றவர். இவர் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் இவர் இலக்கிய உலகில் 1989 களில் பிரவேசித்து பாடசாலை மட்ட மற்றும் தேசிய மட்டங்களில் நடைபெற்ற ஆக்க இலக்கிய போட்டிகளில் பல சான்றிதழ்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் ஒரு ஊடகவியலாளருமாவார்.

**'முஸ்லிம்களும் சமகால பிரச்சினைகளும் சில பதிவுகள்-பாகம்-I', 'எரிகிடங்கைப் பயந்துகொள்!'** ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவரது எழுத்துப் பணிக்காக **'றவ்ழத்துல் ஹஜ்',** (சத்தியப் பூங்கா) விருதையும், ஊடகப் பணிக்காக சிரேஷ்ட ஊடகவியலாளர் விருதையும் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புண்ணியமூர்த்தி ஜெயாகரன்
## (1975.01.24)
## (மதுரன்)

கட்டைப்பறிச்சானைப் பிறப்பிடமாக கொண்ட பு.ஜெயாகரன் தனது ஆரம்பக் கல்வியை தி/விபுலானந்தா வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை தி/சேனையூர் மத்திய கல்லூரியிலும் பயின்றார்.

தற்போது இவர் கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகக் கடமை புரிந்து வருகிறார். கவிதை, பாடலாக்கம், பாடல், புகைப்படம் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டு 2010 இல் **'கீதா சாராசாரம்'** என்னும் கவிதை நூலை வெளியிட்டுள்ளார். 2015 தொடக்கம் **'பொலி'** என்னும் முத்திங்கள் சஞ்சிகையை வெளியிட்டு வருகிறார். இவர் பிரதேச, மாவட்ட, மகாண மட்டங்களில் நடைபெற்ற பாடலாக்கம், புகைப்படம், புதுக்கவிதை போட்டிகளில் பல்வேறு பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுந்தரலிங்கம் சிவசங்கரன்
## (1975.08.08)
### (கொட்டிய ஆரன்)

கட்டைபறிச்சானைப் பிறப்பிடமாகக் கொண்ட சு.சிவசங்கரன் தனது ஆரம்பக் கல்வியை தி/சேனையூர் மத்திய கல்லூரியில் பயின்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

தற்போது விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக கடமைபுரிந்து வருகிறார். இவர் கவிதை, பாடலாக்கம், சிறுகதை ஆகிய துறைகளில் பயணித்து வருகிறார். **'சிறகலரும் சிறுபூக்கள்'** (2016) என்னும் கவிதைத் தொகுப்பினையும், **'ஸ்ரீ அம்மச்சி அம்மன் பரிகல வேள்விக் காவியம்'** (2017) ஆகிய இரு நூல்களை வெளியிட்டுள்ளார்.

கிழக்குமாகாண தமிழ் இலக்கிய விழா, திருகோணமலை பட்டினமும் சூழலும், பிரதேச இலக்கிய விழா, மவட்ட இலக்கிய விழா என்பற்றில் பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முகம்மது முகைதீன் முகம்மது அனீஸ் (அனூன்)

### (1976.10.09)

### (மூதூர் அனீஸ் )

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட எம்.எம்.எம்.அனீஸ் தி/அல்-ஹிலால் மத்திய கல்லூரியில் கல்விபயின்று பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்தோடு இவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்ட இவர் 2018 இல் **'சந்தனச்சாந்து'** என்னும் பல் துறை நூலினை வெளியிட்டுள்ளார். **'அனாமிகாஞ்சலி-2019'** நடத்திய சிறுகதைப் போட்டியில் முதலாமிடமும் மற்றும் மூதூர் பிரதேச சபை 1996/1997 இல் கலைகலாசார விழாவை முன்னிட்டு நடத்திய கட்டுரைப் போட்டியில் முதலாமிடமும் 2019 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வழங்கப்படும் சிறந்த ஆசிரியருக்கான பிரபா குரு பிரதீபா விருதினையும் இவர் பெற்றுள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுஜந்தினி யுவராஜா
## (1978.01.01)


சம்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுஜந்தினி யுவராஜா கூனித்தீவு நாவலர் வித்தியாலயம், தி/சண்முக இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்று தற்போது தி/சல்லி அம்பாள் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.

இவர் பாடசாலைக் காலங்களில் இருந்து கவிதை, கட்டுரை, வில்லுப்பாட்டு, நாடகம், பாண்டு வாத்தியத்துறை ஆகியவற்றில் ஈடுபட்டு வருகிறார்.

'**சேவலின் விடியல்**' (2019) என்னும் கவிதை நூலினை வெளியிட்டுள்ளார். பல்வேறு கவிதைப் போட்டிகளில் பங்குபற்றி சான்றிதழ்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜமால்தீன் நஜாத்
## (1979.06.05)

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜ. நஜாத் தி/மூதூர் மத்திய கல்லூரியில் கல்வி பயின்று தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலைமாணி சிறப்புப் பட்டத்தையும், காமராஜ் பல்கலைக்கழகத்தில் பொது நிருவாகத்துறையில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திருமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமைபுரிந்து வரும் இவர் 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பராளுமன்றத் தேர்தல் தொடர்பான **'எட்டாவது பாராளுமன்றத் தேர்தலும் மக்கள் தீர்ப்பும் - ஒரு பார்வை '** (2016) என்னும் நூலினை வெளியிட்டுள்ளார். மூதூர் பிதேச சபையினால் வெளியிடப்பட்ட **'சேவகம்'** என்னும் சிறப்பிதழின் இதழாசியராகவும் செயற்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரசரெத்தினம் அச்சுதன்
## (1979.08.29)

சேனையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அ.அச்சுதன் தி/சேனையூர் மத்திய கல்லூரி, தி/கோணேஸ்வரா இந்துக்கல்லூரி ஆகிய கல்லூரிகளில் கல்வி பயின்றுள்ளார். 1997ஆம் ஆண்டு எழுத்துலகில் பிரவேசித்தார். ஊடகத்துறையில் 18 வயதில் கால்பதித்த இவர் இலக்கியத்தையும், ஊடகத்தையும் இரு கண்கள் போன்று நேசிப்பவர்.

**'விடிவுகாலக் கனவு'** (2004), **'பேச்சும் செயலும்'** (2015) ஆகிய இரு கவிதை நூல்களையும், **'எங்களையும் இந்த மண்ணில் மனிதர்களாக வாழவிடுங்கள்'** (2011) என்ற கட்டுரை நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

இவரது கலை இலக்கியப் பணிக்காக **'சாமஸ்ரீ கலாயோதி விருது'** **'திருமலை நகர முதல்வர் விருது', 'சிரேஷ்ட உடகவியலாளர் விருது', 'கலைத்தீபம்', 'கலைச்சுடர் விருது', 'இளங்கலைஞர் விருது', 'ஊடக விபுஷணம்'** ஆகிய விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எகுத்தார் நளீம்
## (1981.06.22)
## (மூதூர் இ.நளீம்)

மூதுரைப் பிறப்பிடமாகக் கொண்ட எ.நளீம் தனது ஆரம்பக் கல்வியை தி/மூதூர் மத்திய கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை தி/அல் ஹிலால் மத்திய கல்லூரியிலும் கற்றவர். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இலக்கியப்பணியில் ஈடுபட்டு வருகிறார்.

இவரது கவிதை, குறுங்கதை, கட்டுரை, சிறுகதை என்பன தினகரன், நவமணி, தினமுரசு, மித்திரன் போன்ற பத்திரிகைளில் வெளிவந்துள்ளதுடன் இலங்கை வானொலியிலும் கவிதைகள் ஒலிபரப்பாகியுள்ளன. **'ஊமைக்காயங்கள்'** என்னும் இவரது கவிதை நூால் மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தினால் 2007 இல் வெளியிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருமைநாதன் சதீஸ்குமார்
## (1982.01.01)

சம்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அ. சதீஸ்குமார் தி/ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் கல்வி பயின்று யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் வைத்தியராக (MBBS) பட்டம் பெற்றவர். இவர் தற்போது சம்பூர் மற்றும் தோப்பூர் வைத்தியசாலைகளில் கடமையாற்றி வருகிறார்.

இலக்கியத்தின் மீது ஆர்வமுடைய இவர் **'சம்பூர் பிரதேசத்தின் தொன்மை', (2013) 'பத்திரகாளியம்மன் ஆலய வரலாறும் மகிமைகளும்' (2014), 'கொட்டியாபுரத்து சிங்கம்' (2015), 'நிலக்கரி மின் ஆலையில் சம்பூர்?' (2016), 'கொட்டியாபுரப்பற்று முதுசங்கள்' (2016) 'சம்பூர் இடப்பெயர்வும் மீள் குடியேற்றமும்' (2017), 'தென் திருமலை தேசம் (பாகம் - 01,02,03)', (2018/ 2019)** ஆகிய நூல்களை வெளியீடு செய்து இலக்கிய துறைக்கு காத்திரமான பங்களிப்பை நல்கியுள்ளார்.

இவரது இலக்கியப் பணிக்காக கிழக்கு மாகாண பண்பாட்டு திணைக்களத்தினால் 2014, 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் சிறந்த நூலுக்கான இலக்கியப் பரிசு பெற்றுள்ளார். மேலும் இத்திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு இவருக்கு **'இளங்கலைஞர்'** விருதும் வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முஹம்மத் இம்தியாஸ் ஜுனாப் (நஸீர்)
## (1982.08.10)

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட மு.இம்தியாஸ் ஜுனாப் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி, பேருவளை ஜாமிஆ நளீமியா ஆகியவற்றில் கல்வி பயின்று பேராதனை கல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டதாரியுமாவார். தற்போத இவர் ஜாமிஆ நளீமியாவின் விரிவுரையாளராகக் கடமையாற்றுவதுடன் மலேசியா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தை அரபு மொழியில் பெற்றுள்ளார்.

இலக்கியத்தின் மீது ஆர்வமுடைய இவர் **'அன்றாடவாழ்வில் இபாதத் சட்டங்கள்'** (2007), **'வரலாற்று மனிதர்கள்-02,03'** (2007), **'பாதையின் இடையே'** (2009), **'பிரச்சினைகளை கொஞ்சம் தள்ளி வைப்போம்'** (2017), **'சிறைப்பட்ட நிலமும் ஊனமுற்ற தேசமும்'** (2018) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மஸ்கூர் முகம்மது மனாஸீர்
## (1990.01.08)

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட மஸ்கூர் எம். மனாஸீர் தி/மூ/அல்-ஹிலால் மத்திய கல்லூரியில் கல்வி பயின்று பின்னர் மூதூர் நத்துவதுல் உலமா அரபுக் கல்லாரியில் மௌலவிப் பட்டம் பெற்ற இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இலக்கிய ஆர்வம் கொண்ட இவர் **'விழுதுகள், பாகம்-1'** (2017) (மூதூரின் முதன்மைகள்) என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இவர் தற்போது மூதூர் பிரதேச செயலகத்தில் பட்டதாரிப் பயிலுனராக கடமையாற்றி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பஸ்மிலா சிபான்
## (1990.03.20)

மூதூர் தக்வா நகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்மிலா சிபான் தி/மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் உயர்தரம் வரை கற்றவர். பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியையாக தி/அல் மனார் வித்தியாலயத்தில் தற்போது கடமையாற்றி வருகிறார்.

தர்கா நகர் தேசிய கல்வியற் கல்லூரியில் பயிற்சி பெறும் காலத்தில் நடைபெற்ற கவிதைப் போட்டிகளில் பல பரிசில்களை பெற்றுள்ளார். அத்தோடு வானொலியிலும் இவரது கவிதைகள் ஒலிபரப்பாகியுள்ளன. இவர் **'நிழலாடும் நிஜங்கள்'** (2012) என்ற கவிதை நூலை வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## றசீம் பாத்திமா றொஷானா
## (1993.08.29)

மூதூர் ஆனைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட றசீம் பாத்திமா றொஷானா தனது கல்வியை தி/அறபா நகர் வித்தியாலயத்திலும், தி/அல்-ஹிதாயா மகாவித்தியாலத்திலும், தி/மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும் மற்றும் தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரியிலும் கல்வி கற்றார்.

பொது நிருவாகத்தில் கலைமாணிப்பட்டம் பெற்ற இவர் மூதூர் வலயக்கல்வி அலுவலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றுகிறார். இலக்கியத்துறையில் பிரவேசித்துள்ள இவர் பல்வேறு சிறுகதைகள், கவிதைகளை எழுதி பலபரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார் **'பயிரொன்று கதிராகிறது'** என்னும் சிறுகதைத் தொகுப்பை 2016 இல் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜுனைட் முகம்மது இஹ்ஷான்
## (1994.06.23)

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜே.எம்.இஹ்ஷான் தி/அல்-ஹிலால் மத்திய கல்லூரியிலும் திருகோணமலை இந்துக் கல்லூரியிலும் பயின்று இரத்மலானை பல்கலைக்கழக கல்லூரியில் உணவு தொழிநுட்ப விஞ்ஞானப் பிரிவில் பயின்றவர்.

இவர் 2018 ஆம் ஆண்டு **'அல்குர்ஆனும் விஞ்ஞானமும்'** **'விஞ்ஞானம் - சுருக்க குறிப்புக்கள் (G.C.E.O/L)'**(2017) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். முத்திதழ் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் செயற்பட்டு வருகிறார்


இவர் தற்போது 3CD நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ion.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M.M.Irfan,(P.Library)